
Source: *Tamil Murasu*, p12
Date: 5 March 2016

மார்ச் 9ஆம் தேதி சூரிய கிரகணம்



இந்தோனீசியாவின் வானிலை ஆய்வு மையம் மார்ச் 9ஆம் தேதி நிகழவிருக்கும் சூரிய கிரகணம் பற்றி ஜகார்த்தாவில் செய்தியாளர்களுக்கு விளக்குகிறது. **படம்: ஏஎப்பி**

மார்ச் 9ஆம் தேதி புதன்கிழமை காலை 8.23 மணிக்கு சூரிய கிரகணம் நிகழவுள்ளது. இது வழக்கமாக நிகழும் பொதுவான 'பகுதி சூரிய கிரகணம்தான் என்று கூறப்படுகிறது.

இந்த நிகழ்வின்போது சூரியனின் முக்கால் பகுதி நிலவால் மறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அன்று காலை 7.12 மணிக்கு சூரியன் உதயமாகும்.

முழுமையான சூரிய கிரகணத்தின்போது சூரியனின் முழுப் பகுதியும் நிலவால் மறைக்கப்படும். இவ்வகை கிரகணம் ஆண்டுக்கு ஒரு முறை நிகழும்.

சிங்கப்பூரில் கடைசியாக 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிகழ்ந்தது. அடுத்த முழுமையான கிரகணம் 2019ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி நிகழவுள்ளது.

சூரிய கிரகணத்தின்போது பாதுகாப்புக் கண்ணாடிகள் இன்றி சூரியனை நேரடியாகக் காணக்கூடாது. அவ்வாறு செய்வது கண்களுக்கு கெடுதல் விளைவிக்கும். அதே போல் புகைப்படமெடுப்பவர்களும் தக்க பாதுகாப்புக் கண்ணாடிகளுடன் புகைப்படமெடுக்க வேண்டும்.

இல்லையெனில் சூரியனின் வெப்பத்தால் புகைப்படக்கருவி பழுதடைய நேரிடும்.

சூரிய கிரகணத்தைப் பற்றி அறிந்துகொள்ளும் வகையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் மார்ச், 8, 9 ஆகிய தேதிகளில் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இது தொடர்பான கண்காட்சி ஒன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 2.00 மணிக்கு தொடங்குகிறது.

சிங்கப்பூர் அறிவியல் நிலையத்தில் மார்ச் 9ஆம் தேதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு சூரிய கிரகணத்தை பார்க்கும் நிகழ்வு தொடங்குகிறது.

இதில் ஏராளமானோர் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.